**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**

இந்தியா வானிலை ஆய்வு துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 27-09-2022**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-09-27 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-09-28 | 2022-09-29 | 2022-09-30 | 2022-10-01 | 2022-10-02 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 35.0 | 48.0 | 8.0 | 6.0 | 8.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 32.0 | 32.0 | 32.0 | 33.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 25.0 | 25.0 | 25.0 | 26.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 50 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8.0 | 6.0 | 8.0 | 8.0 | 10.0 |
| காற்றின் திசை (கோணம்) | 230 | 230 | 260 | 260 | 270 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 8 | 6 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் வாரங்களில் இலேசான முதல் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 70-80% ஆகவும், பகல் நேரங்களில் 40-50% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 32.0-33.0 °C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 25.0-26.0°C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 6-10 கி.மீ ஆக தென்மேற்கு திசையில் இருந்து மேற்கு திசையில் வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

02.10.2022 முதல் 08.10.2022 வரை தமிழ்நாட்டில் மழை இயல்பை விட அதிகமாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பாகவும் இருக்கும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் வாரங்களில் இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் பயிர்களுக்கு முறையான வடிகால் வசதி செய்யவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | 1. நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த தயாமீதாக்ஷம் 25% WG 100 கிராம்/எக்டர் அல்லது டைமீத்யோட் 1.5 மி.லி/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். 2. தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5% 150 மிலி/எக்டர் அல்லது ஃபுளுபெண்டிமைடு 39.35 SC 50 கிராம்/எக்டர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும். |
| மக்காச்சோளம் | 1. மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகள் படைப்புழுவின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது, அதை கட்டுப்படுத்த வேப்பம் பிண்ணாக்கு எக்டருக்கு 250 கிலோ இடலாம். 2. சியன்ட்ரானிலிப்ரோல் 19.8% + தயாமீதாக்ஷம் 19.8 FS @ 4.0 மிலி/கிலோ என்ற அளவில் விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். 3. இஞ்சி அல்லது தட்டைப்பயிறு அல்லது உளுந்து பயிர்களை வரப்பு ஓரங்களில் நடவு செய்யலாம். 4. எக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறிகளை வைக்கலாம். 5. குளோரான்டிரனிலிப்ரோல் 18.5 SC @ 0.4 மிலி/லி (அல்லது) ஃபுளுபெண்டிமைடு 20 WG (0.5 கிராம்/லி) என்ற அளவில் பயிர் செய்த 15-20 நாட்களில் தெளிக்க வேண்டும். 6. எமாமெட்டின் பென்சோயேட் 5 SG (0.4 g/l) அல்லது ஸ்பைனிடோராம் 11.7 SC (0.5 மிலி/லி) 35-40 நாள் மற்றும் 60 நாள் தெளிக்க வேண்டும். |
| பருத்தி | தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் பருத்தி இளம் செடிகளில் பச்சை தத்துப்பூச்சியின் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த தயாமீதாக்ஷம் 25 WG 0.6 கிராம்/லிட்டர் அல்லது இமிடாகுளோபரிட் 17.8 SL 0.6 கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மரவள்ளிக்கிழங்கு | தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் மரவள்ளிகிழங்கில் மாவுப்பூச்சியின் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த புளோனிகாமைடு 50% WG 60 கிராம்/ஏக்கர் அல்லது ஸ்பைரோசடெட்ராமெட் 150 OD 250 மிலி/ஏக்கர் அல்லது தயாமீதாக்ஷம் 25 WDG 40 கிராம்/ஏக்கர் என்ற அளவில் தெளிக்கவும். |
| வாழை | தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் வாழையில் சிக்காடோக்கா இலைப்புள்ளி நோய் தாக்கம் தென்பட்டால் கார்பென்டாசிம் 1.0 கிராம்/லிட்டர் அல்லது புரோபிகோனசோல் 1.0 மிலி/லிட்டர் அல்லது மேங்கோசெப் 2.5 கிராம்/லிட்டர் மற்றும் ஒட்டும் திரவம் 1.0 மிலி/லிட்டர் கலந்து 10-15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும். |
| மஞ்சள் | 1. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் மஞ்சள் பயிரில் இலைக் கருகல் நோயின் தாக்கம் தென்பட்டால் கார்பென்டசிம் 1.0 கிராம்/லிட்டர் அல்லது புரோபிகோனசோல் 1.0 மி.லி/லிட்டர் அல்லது மேங்கோசெப் 2.5 கிராம்/லிட்டர் மற்றும் ஒட்டும் திரவம் 1.0 மிலி/லிட்டர் கலந்து 10-15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும். 2. மஞ்சல் பயிரில் கிழங்கு அழுகல் நோயைக் கட்டுப்படுத்த முறையான வடிகால் வசதி அமைக்கவும். அதை தொடர்ந்து காப்பர் ஆக்ஸிகுளோரைடு 3.0 கிராம்/லிட்டர்அல்லது ரிடோமில் 1.0 கிராம்/லிட்டர் என்ற அளவில் வேரை சுற்றி ஊற்றவும் மற்றும் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | 1. காற்றின் வேகம் சில நேரங்களில் அதிகமாக இருக்க வாய்ப்புள்ளதால், எளிதில் முறியக்கூடிய முருங்கை மற்றும் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். 2. விவசாயிகள் முதிர்ச்சி அடைந்த பயிர்களை அறுவடை செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது மற்றும் அறுவடை செய்த பயிர்களை கிடங்குகளில் அல்லது தார்பாய்கள் கொண்டு மூடிபத்திரபடுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. 3. வரும் வாரங்களில் இலேசான முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் களைக்கொல்லி, பூச்சிக்கொல்லி மற்றும் உரம் இடுதலை தவிர்க்க வேண்டும். |